**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7287

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 18.01.2024

Accepted: 24.03.2024

Published: 01.04.2024

Citation:
Swarnalatha, V. (2024). Novels Shed Light on Historical Mysteries. *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 122–128.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7287

*Corresponding Author:
sornalathav83@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Novels Shed Light on Historical Mysteries

**V. Swarnalatha**
*Assistant Professor, Self Finance Courses, T.T. Hindu College*
*Nagercoil, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0003-6021-043X*

**Abstract**
*Novels bring out history with evidence. After Kumari Kandam plunged into the sea, the Pandyas from there migrated to Kapadapuram. The accounts of other linguists suggest that there must have been a very special civilization at Kapadapuram. There is no evidence in history of the existence of a group called 'Kapalika' during the Sangam Age, Sangam Maruviya period or the early Pallava period. History can be traced through novels.*

***Keywords: Historical Novels, Science Book, Puzzle, Pandyas, Kumari Kandam, Sangam Age***

**References**
1. Silambu Adiyarkunallar Urai, Chennai U.Ve.Sa Library Edition 1978.
2. Ma. Rajamanickam, Pallavar Varalaru, Saiva Siddhantha Book Publishing Corporation, Chennai, Edition 1971.
3. Rajagopalan, T., Varalatru Navelgalil Varalatru Seithigal, 44 Mahalakshmi Nagar, Chennai-73, 1993.

# வரலாற்றுப் புதிர்களுக்கு வரலாற்று நாவல்கள் காட்டிய வெளிச்சம்

**வை. சொர்ணலதா**
உதவிப் பேராசிரியர், சுயநிதிப் பாடப்பிரிவு
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர் கோவில்

***ஆய்வுச்சுருக்கம்***
*நாவல்கள் வரலாற்றினை ஆதாரத்துடன் வெளிக்கொணர்கின்றன. குமரிக்கண்டம் கடலில் மூல்கிய பிறகு அங்கிருந்த பாண்டியர்கள் கபாடபுரத்திற்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர். பிறமொழியாளர்களின் குறிப்புகளால் கபாடபுரத்தில் மிக சிறப்பானதொரு நாகரிகம் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. சங்க காலத்திலோ சங்கம் மருவிய காலத்திலோ முற்காலப் பல்லவர்கள் காலத்திலோ "காபாலிகர்" என்ற கூட்டத்தார் இருந்ததற்குரிய சான்றுகள் வரலாற்றில் இல்லை. நாவல்கள் மூலம் வரலாற்றினை அறிந்து கொள்ளலாம்.*

***முக்கியச் சொற்கள்:*** *வரலாற்று நாவல்கள், அறிவியல் நூல், புதிர், பாண்டியர்கள், குமரிக்கண்டம், சங்ககாலம்*

## முன்னுரை

வரலாறும் வராலாற்று நாவலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. வரலாறு என்பது வெவ்வேறு காலக்கட்டங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறிடும் அறிவியல் நூல். தக்க சான்றுகள் இல்லாமையினாலே வரலாற்றில் சில இடங்கள் தொடர்பற்றும் சில இடங்கள் புதிராகவும் சில இடங்கள் உயிரற்றும் காணப்படுகின்றன. இவற்றை நாவல்கள் ஆதாரத்துடன் வெளிக்கொணர்கின்றன. அதனை ஆய்வுக் கட்டுரையில் காணலாம்.

## வரலாற்றுப் புதிர்கள்

வரலாற்றுப் புதிர்களுக்கு விடைகாணச் சான்றுகள் கிடைக்காதபொழுது, வரலாற்றாசிரியனும், நாவலாசிரியனும் கற்பனையும் மனோ வேடத்தையுமே பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இதனை இ.எச்.கார், "துல்லியம் என்பது வரலாற்றாசிரியனது கடமையேதவிர குணமன்று துல்லியத்திற்காக ஒரு வரலாற்றாசிரியனைப் பாராட்டுவதென்பது சிறந்த மரங்களையும் சிமெண்டையும் உரிய முறையில் பயன்படுத்தியமைக்காக ஒரு கட்டடக் கலைஞனைப் பாராட்டுவது போலாகும். கட்டடக்கலைஞனுக்கு இவை தேவையே தவிர இன்றியமையாதவை அல்ல, வரலாற்றாசிரியனுக்குச் சான்றுகள் தேவையென்று சொல்வது சான்றுகளிடத்து ஏதோ தனித்தன்மை உள்ளது என்பதால் அன்று, அச்சான்றுகளை வைத்து அவன் புனைகின்ற மனோவேடத்தினாலாகும்"[1] என்று எழுதுகிறார்.

மனோவேடத்தின் மூலம் அல்லது கற்பனையின் மூலம் வரலாற்று மாந்தர்களின் மனத்தை ஊடுவிப் பார்த்தால்தான் வரலாற்றுப் புதிர்களுக்கு வெளிச்சம் கிடைக்கும். சில வரலாற்றுப் புதிர்கள் பின்வரும்

1. கபாடபுரம், 2. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் காலத்தில் கபாலிகர் நுழைவு, 3. பரமேஸ்வரப் பல்லவன் காஞ்சியை விட்டு ஓடியது, 4. பரமேஸ்வர வர் மன் பெருவள நல்லூரில் வெற்றி பெற்றது, 5. ஆதித்த கரிகாலன் கொலை, 6. காந்தர்ச் சாலை, 7. இராசேந்திரனின் வடநாட்டுப்

படையெடுப்பின் போது சாளுக்கிய ஜெயசிம்மன் எதிர்க்காதது, 8. தில்லையிலிருந்து கோவிந்தராசப் பெருமாள் வெளியேற்றப்பட்டது, 9. கிருஷ்ணதேவராயரின் மரணம் முதலியன.

**கபாடபுரம்**

குமரிக் கண்டம் கடலில் மூழ்கிய பிறகு அங்கிருந்த பாண்டியர்கள் கபாடபுரத்திற்கு இடம் பெயர்ந்திருக்கின்றனர். பிற மொழியாளர்களின் குறிப்புகளால் கபாடபுரத்தில் மிக சிறப்பானதொரு நாகரிகம் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஆனால், அந்நாகரிகத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அறிய முடியவில்லை. கபாடபுரம் என்ற சொல்லிற்குரிய முக்கியத்துவத்தைக்கூடச் சான்றுகளின்மையால் வரலாறு தரவில்லை.

குமரியாற்றுக்கும் தாமிரபரணியாற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பில் கபாடபுரம் இருந்தது. வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரையில் அங்கிருந்து ஆட்சி புரிந்திருக்கின்றர். கே.கே. பிள்ளை குமரிக் கண்டம் கடலில் மூழ்கியபிறகு அங்கு இடைச்சங்கம் இருந்ததையும் அதற்கு ஆலவாய், வாயிலூர் , முத்தூர் என்று வேறு பெயர்கள் இருந்ததையும் குறிப்பிடுகிறார். மா.இராசமணிக்கம் கபாடபுரத்தின் முத்துக்கள் மௌரிய சந்திரகுப்தன் நாட்டில் நல்ல விலைக்கு விற்கப்பட்டதென்றும் தெரிவித்துள்ளார். மேலும் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட பின்பு கபாடபுரம் அழிந்தது என்பது இறையனார் களவியல் கூற்று. கி.மு. 306 இல் பெரிய கடற்கோள் உண்டானதென்று இலங்கை வரலாறு கூறுகிறது. அக்கடற்கோளே இலங்கைக்கு அண்மையிலிருந்த கபாடபுரத்தை அழித்திருக்கலாம் என்று எழுதுகிறார். வரலாறு இந்த அளவுக்குத்தான் செய்திகளைச் சொல்கிறது.

அந்த நகரத்திற்கு வேறு சில சிறப்புக்கள் இருக்க வேண்டுமென்பதை இருண்ட வரலாற்று அறையினுடைய கதவுத் துவாரங்களின் வழியாகப் பார்க்கிறார் நா. பார் த்தசாரதி. “காடபுரம்” என்ற அவரது நாவல்தான் கதவுத் துவாரம். அதன் வழியாக அவர் கொடுத்த வெளிச்சம் அறை முழுவதும் காட்டாவிட்டாலும் இரண்டொரு மூலைகளைச் காட்டுகிறது. கபாடபுரத்தின் முக்கியத்துவம் அதன் செல்வச் செழிப்பில் இருக்க வேண்டும் என்று கருதுகிறார் நாவலாசிரியர். அச்செல்வச் செழிப்பினைக் காட்டக் கபாடபுரம் நாவலில் வெண்தேர்ச் செழியனுக்கு 3000 முத்துத் தேர்கள் இருந்ததாக எழுதுகிறார். நாவலில் வெண்தேர்ச் செழியன் என்ற வரலாற்றுப் பத்திரம் பேசும்போது “இந்த மூவாயிரம் முத்துத் தேர்களும் என் செல்லப் பிள்ளைகள் தாம்”[2] என்று குறிப்பிடுவதாலும் பின்னர் கடலில் கொண்ட பழம்பெரும் பாண்டிநாட்டிற்குப் பிறகு தரைப்பகுதி அதிகமுள்ள வடதிசை நோக்கிப் பாண்டியர் கோநகரம் நகர நகர நீரில் ஓடும் மரக்கலங்களைக் காட்டிலும் தரையில் ஓடும் தேர்ப்படைகளை அதிகமாக்கிப் பலப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பல்லாயிரம் யவனத் தச்சர்களை வரவழைத்துப் பணிக்கமர்த்தி நிருதர் நாட்டுக் காடுகளில் உள்ள வயிரம் பாய்ந்த மரங்களைக் கலங்கள் மூலமாகக் கொணர்ந்து இந்த தேர்களைச் சமைத்தார். வெண்தேர்ச் செழியர், நகரணி மங்கலநாள் அன்று நடைபெறும் இந்தத் தேர் உலாவைப் பார்ப்பதற்காக பாண்டிய நாட்டின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல் வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் வந்து கூடுவதுண்டு என்று நாவலாசிரியரே எழுதுவதாலும் அதன் செல்வச் சிறப்புத் தெரிகிறது.

**மகேந்திரவர் மன் நரசிம்மவர் மன் காலத்தில் காபாலிகர் நுழைவு**

சங்க காலத்திலோ சங்கம் மருவிய காலத்திலோ முற்காலப் பல்லவர்கள் காலத்திலோ “காபாலிகர்” என்ற கூட்டத்தார் இருந்ததற்குரிய சான்றுகள் வரலாற்றில் இல்லை. சிவ பெருமான் காபாலிகர் வடிவத்தில் வந்தாக

வருணிக்கப்பட்டிருக்கிறாரே தவிர தொண்டர்கள் காபாலிகர் வேடத்தில் நடனமாடியதாக இல்லை. ஆனால் இடைக்காலப் பல்லவர் ஆட்சியின் தொடக்கத்தில் அதாவது மகேந்திரப் பல்லவன் ஆட்சியின் இறுதியிலும் நரசிம்மப் பல்லவன் ஆட்சியின் தொடக்கத்திலும் காபாலிகர் கூட்டம் தொண்டை நாட்டில் பெருவாரியாகப் பரவியிருந்தது. தமிழ் நாட்டிற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் விரோதமான காபாலிகர் கூட்டம் எங்கிருந்து வந்தது எதற்காக வந்தது எப்படி வந்தது என்பதற்கான விளக்கம் வரலாற்றில் இல்லை.

கபாலிகர் கூட்டம் தீய நோக்கத்தோடு இந்த நாட்டில் புகுந்ததை மட்டும் அறிய முடிகிறது. இவர் பைரவரை வணங்கினர். மண்டை ஓடுகளை அணிந்து கொண்டு இருந்தனர். மனிதர் உட்பட எல்லா உயிர்களையும் பைரவர்க்குப் பலியிட்டனர். உடல் இறைச்சியையும் மதுவையும் உண்டனர் என்று எம்.வி.கே. ராவ் எழுகின்றார். இக்காபாலிகள் தோற்றத்தை யுவான்சுவாங் தலையிலும் கழுத்திலும் எலும்புகளால் ஆகிய மாலையை அணிந்திருந்தார்கள். மலைக்கிடையிலுள்ள குகைகளில் சமாதியைச் சுற்றும் எருமைகளைப் போல் திரிந்தார்கள் என்று எழுதுகிறார்.

இக்கபாலிகர் கூட்டம் எங்கிருந்து வந்தது, இவ்வேடத்தைத் தாங்கியவர்கள் யாவர் என்பது வரலாற்றில் ஒரு புதிராகவே இருக்கிறது. இப்புதிரை விடுவிப்பதற்குக் கல்கி "பார்த்திபன் கனவு" என்னும் நாவலில் வழி கண்டிருக்கிறார். நாவலில் காபாலியர் கூட்டத்தின் தலைவனைக் கண்டுபிடிக்க முதலாம் நரசிம்மவர்மன் பலவித முயற்சிகள் எடுக்கிறான். மறைந்து மறைந்து வாழ்ந்த அக்கூட்டத்தின் தலைவனைக் கண்டுபிடிக்கிறனர். அவன் யாரென்றால் நரசிம்ம வர்மனிடம் வாதாபிப் போரில் தோல்வியுற்ற இரண்டாம் புலிகேசியின் தம்பி நீலகேசியே. வாதாபி யுத்தத்திற்குப் பிறகு சாளுக்கியப் படையும் ஆட்சியும் நிலை குலைகின்றன. பல்லவர்களைப் போர்க்களத்தில் நேரடியாகச் சந்திக்க வலிமையற்ற நீலகேசி சூழ்ச்சியால் வெல்வதற்குத் திட்டம் போடுகிறான். நீலகேசியிடம் நிறையப் படைக் கருவிகளும் ஆள்களும் இருந்த காரணத்தினால் எல்லோரையும் காபாலிகர் வேடம் போட்டுத் தொண்டை நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வருகிறான்.

கல்கி அதனை "இந்த நீலகேசி காபாலிக வேஷத்தில் நமது புண்ணியத் தமிழகத்தில் வந்து இருந்து கொண்டு பஞ்சத்தினால் மக்களின் புத்தி கலங்கியிருந்த காலத்தில் காபாலிகத்தையும் நரபலியையும் பரப்பத் தொடங்கினான். எதற்காக? வீரத்தினால் ஜயிக்க முடியாத காரியத்தைச் சூழ்ச்சியனால் ஜயிக்கலாம் என்றுதான். கடல்களுக்கப்பாலுள்ள தேசங்களுக்கெல்லாம் புகழ் பரவியிருக்கும் நமது மாமல்ல சக்கரவர்த்திக்கு விரோதமாக உங்களையெல்லாம் ஏவிவிட்டுச் சதி செய்விக்கலாம் என்று கல்கி பார்த்திபன் கனவு என்னும் நாவலில் சொல்லுகிறார்.

## பரமேசுவர வர்மன் காஞ்சியைவிட்டு ஓடியது

முதலாம் பரமேசுவர வர்மன் காஞ்சியை ஆண்டு கொண்டிருந்த பொழுது இரண்டாம் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் காஞ்சியை நோக்கிப் படையெடுத்து வந்தான். காஞ்சியின் தலைவாசலில் இருந்த பல்லவப்படை தோல்வியுறவே கோட்டைக்குள்ளிருந்த மன்னன் பரமேசுவரவர்மன் இரகசியமாகத் தப்பி ஓடிவிட்டான். பல்லவ பரமேசுவர வர்மன் தலைமறைவாகக் கோட்டையை விட்டு வெளியேறினான் என்று வரலாறு சொல்லுகிறதேதவிர ஏன் வெளியேறினான் என்று சொல்லவில்லை.

தமிழக வரலாற்றிலேயே இது ஒரு புதிர். இப்புதிருக்கு நாவலாசிரியர் சாண்டில்யன் "ராஜதிலகம்" என்ற நாவலில் விடை காணுகிறார். பகைவன் தன்னாட்டைத்தை தாக்கும் போது எதிர்த்து நின்று போர் தொடுத்துக் கோட்டையைக் காக்க வேண்டிய மன்னன்

கோட்டையை விட்டு வெளிறேுகிறான். அவன் வரலாற்றின்படி கோழைமல்லன். பின்னர் நிகழ்ந்த போரில் விக்கிரமாதித்தனைக் கந்தையைச் சுற்றிக்கொண்டு ஓடவைத்த பெருவீரனாகத் திகழ்கின்றான். ரணசயன், அத்யந்த காமன் போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கின்றான். இவன் வீரன் என்பது இவற்றால் தெளிவாகிறது. சாண்டில்யன் பரமேசுவரவர்மன் காஞ்சியைக் கோட்டையைவிட்டு வெளியேறியதற்குரிய காரணத்தை வரலாற்றிக்குப் பொருந்தும் வகையில் கண்டிருக்கிறார்.

### பரமேசுவர வர்மன் பெருவளநல்லூரில் பெற்ற வெற்றி

முதலாம் பரமேசுவர வர்மன் மேலைச் சாளுக்கியனான முதலாம் விக்கரமாதித்யனைப் பெருவளநல்லூரில் கி.பி. 674 - 675 க்கு இடையில் நடந்த போரில் தோற்கடித்தான் என்பது வரலாறு. காஞ்சியிலிருந்து தலைமறைவாக ஓடிய பரமேசுவரன் ஆந்திர நாட்டிலிருந்து படைபலம் பெற்று வந்து பெருவளநல்லூரில் விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தான் என்பது ஹீராஸ் பாதிரியார் எழுதுகிறார். ஆனால் கூரத்துப் பட்டயம் பரமேசுவரவர்மன் பிறர் உதவியின்றிப் பல இலட்சம் வீரரைக் கொண்ட விக்கிரமாதித்யனைக் கந்தையைச் சுற்றிக்கொண்டு ஓடும்படி செய்தான் என்று சொல்கிறது. பரமேசுவரன் ஹீராஸ் பாதிரியார் எழுதுவதுபோல் ஆந்திர நாட்டிலிருந்து பெரிய படைபலம் பெற்று வந்திருந்தாலும் பெரிய படைபலம் பொருந்திய விக்கிரமாதித்தனைத் தலைநகரை விட்டு ஓடிய பரமேசுவரன் தோற்கடித்திருக்க முடியாது. எனவே பெருவளநல்லூர் வெற்றிக்கு வேறு சில காரணங்களும் துணையாக இருந்திருக்க வேண்டும். அக்காரணங்களை வரலாறு தெளிவாகச் சொல்லவில்லை. என்றாலும் வரலாற்று நாவலாசிரியர் சாண்டில்யன் ‘ராஜதிலகம்’ என்ற நாவலில் அக்காரணங்களைச் சொல்லுகிறார்.

பரமேசுவரனும் அவன் மகனும் இராசசிம்மனும் கையாண்ட இராசதந்திரப் போர்முறைகளோ, பெருவளநல்லூர் வெற்றிக்குக் காரணம் என்கிறார் நாவலாசிரியர். நாவல் தரும் செய்தியின் சுருக்கம்: சாளுக்கிய விக்கிரமாதித்தன் நின்ற சீர் நெடுமாறன் மகன் கோச்சடையப் பாண்டியனோடு நெல்வேலிப் போரில் ஈடுபட்டிருக்கும் சமயம் பார்த்துப் பரமேசுவரன் போர் தொடுத்தான். சாளுக்கியப் படைபோருக்கு எழும்போதெல்லாம் அதற்குத் துணையாக நின்ற கங்கநாட்டு மன்னன் புவிக்கிரமனோடு மணவினை கொண்டு அவனைப் பெருவளநல்லூருக்கு வராமல் நடுநிலை வகிக்கச் செய்தான் பரமேசுவரன். பெருவளநல்லூர்ப் போர்க்களத்தில் பரமேசுவரனும் இராசசிம்மனும் படையை லதா விருச்சிக வியுகத்தில் அமைத்ததே வெற்றியை நிர்ணயித்தது. இவையே நாவலாசிரியர் கண்ட புதிய வெளிச்சம்.

### ஆதித்த கரிகாலன் கொலை

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனின் மூத்தமகன் ஆதித்த கரிகாலன் கி.பி. 969 இல் வஞ்சகர்கள் சிலரால் கொல்லப்படுகிறான். கி.பி. 969 ஆம் ஆண்டு ஆதித்த கரிகாலனுக்கும் இராகசிம்மப் பாண்டியன் மகன் வீரபாண்டியனுக்கும் இடையில் நிகழ்ந்த சோழ - பாண்டியப் போரில் வீரபாண்டியனை ஆதித்த கரிகாலனை கொன்று விட்டான். அதனால் ஆதித்த கரிகாலன் வீரபாண்டிய தலைகொண்ட கோப்பதகேசரி வர்மன் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றனர். காஞ்சிபுத்திலேயே முகாமடித்து இரட்டை மண்டலத்துக் கன்னரதேவன் படைகளை வடபெண்ணைக்கு வடக்கே துரத்தியதோடு அடுத்து வடநாட்டுப் படையெடுப்பிற்கும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான் ஆதித்த கரிகாலன். தன் மூத்த புதல்வனுடைய வீரத்தையும் ஆற்றலையும் கண்டு மெச்சிய சுந்தரசோழன் ஆதித்தகரிகாலனுக்கு கி.பி. 966 இல்

இளவரசு பட்டங்கட்டினான். கி.பி.. 969 இல் வஞ்சகர்களால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டான். சுந்தர சோழன் காலத்தில் நிகழ்ந்த இக்கொலையைச் செய்தவர்கள் யாவர் என்பது முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. கொலை செய்தவர்கள் யாவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டதே தவிர கொலைக்கு யாது காரணம் எனபது வரலாற்றாசிரியர் களால் முழுமையாக இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வரலாற்றிலே இருட்டாக இருக்கும் இப்பகுதியில் நாவலாசிரியர்கள் சிலர் நுழைந்து உண்மைகளைத் தேட முயன்றிருக்கின்றனர். கல்கியினுடைய பொன்னியின் செல்வன் விக்கிரமனுடைய நந்திபுரத்து நாயகி, கோவி மணிசேகரனுடைய மணிமண்டபம் ஆகிய மூன்று நாவல்களும் இக்கொலைக்குரிய காரணங்களைத் தெரிவிக்கின்றன.

**காந்தர்ச் சாலை**

முதலாம் இராசராசனுடைய போர் வெற்றிகளைச் சொல்லும் கல்வெட்டு ஒன்றில் திருமகள் போல பெருநிலச் செலிவியுந் தனக்கேயுரிமை புண்டமை மனக்கொளத் காந்தர்ச் சாலை கலமறுத்தருளி என்னும் அடிகள் வருகின்றன. காந்தர்ச் சாலை கமலமறுத் தருளி என்பதற்கு வரலாற்றாசிரியர்களிடம் ஒருமித்த கருத்து இல்லை.

வரலாற்றறிஞர் கே.கே. பிள்ளை காந்தர்ச் சாலை என்பதை மாணவர்கள் தங்கியிருந்து உணவு உண்டு கல்வி பயின்று வந்த பல்கலைக்கழகங்கள் என்கிறார். கல்வெட்டுகளில் சாலை, சாலாபோகம் என்ற சொற்கள் அக்கல்வி நிறுவனங்களையும் அவற்றிற்கு விடப்பட்டு வந்த நிவந்தங்களையும் குறிப்பனவாகக் கொள்ள வேண்டும். இராசராசன் கந்தர்ச் சாலையைத் தன்னுடைய ஆணையின் கீழ்க் கொண்டு வந்து அதனிடம் இருந்த படைபலத்தைக் குறைத்துச் சாலையின் நடைமுறையில் பெரிய மாறுதல்களைச் செய்து சாலையைச் சீர் திருத்தி அமைத் திருக்க வேண்டும் என்று எழுதுகிறார்.

காந்தர்ச்சாலை என்பது கப்பல் தளமன்று என்று வரலாற்றாய்வளர்கள் சிலர் வாதிட்ட போதும் வேறு சில வரலாற்றாசிரியர்கள் காந்தர்ச் சாலை கப்பல்படை இருந்த இடமே என்று ஆராய்ந்துக் கண்டிருக்கின்றனர். கே.பி.சுப்பிரமணிய ஐயர், எ.எஸ். இராமநாத ஐயர் எனும் ஆய்வாளர்கள் இருவரும் வீரபாண்டியன் சாலையும் சேரலன் சாலையும் இலங்கையும் தண்டாற் கொண்ட கோவிரா ஜகேசரிபற்மாரன உடையார் ஸ்ரீராஜாதிராஜ தேவன் என்ற பிற்காலக் கல்வெட்டையும் உல்ஜ் துரையினுடைய கருத்தையும் அடிப்படையாக வைத்துக் காந்தர்ச்சாலை என்பது இராசராசனின் கப்பற்படை வெற்றியே என்று நிறுவுகின்றனர்.

இராசராச சோழனின் வரலாற்றை ஆய்ந்த கிருஷ்ணசாமி சர்மாவும் இதே கருத்தினைத் தெரிவிக்கின்றனர். க.த.திருநாவுக்கரசும் காந்தர்ச்சாலை கலமறுத்தருளி என்னும் தொடர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு போர் நிகழ்ச்சியைத் தெரிவிப்பதாகவே தோன்றுகிறது என்கிறார்.

வரலாற்றில் இரண்டாவது சொன்ன காந்தர்ச்சாலை கப்பல் படை இருந்த இடமே என்ற கருத்தை அடிப்படையாக வைத்து நாவலாசிரியர் பூவண்ணன் காந்தர்ச் சாலை என்னும் நாவலை எதிழுதியுள்ளர். நாவலாசிரியர் பூவண்ணன் இந்நாவலின் மூலம் வரலாற்றாசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகி இருக்கும் காந்தர்ச் சாலையில் சில புதிய வெளிச்சங்களைச் செலுத்துகிறார். முதலாம் இராசேந்திரனின் வடநாட்டுப் படையெடுப்பின்போது சாளுக்கிய ஜெயசிம்மன் எதிர்க்காமல்

முதலாம் இராசேந்திர சோழன் வடநாட்டின் மீது படையெடுத்தபோது மாசுணி தேசத்து நாகர் தலைவன் எதிர்த்துப் போரிடுகின்றான். ஒட்டர தேசத்து இந்திரதத்தன் எதிர்த்துப்

போரிடுகின்றான். தண்டபுத்தி தர்மபாலன் எதிர்த்துப் போரிடுகின்றான். வடநாட்டு ரணசூரன் எதிர்த்துப் போரிடுகின்றான். வங்காள நாட்டுக் கோவிந்த சந்திரன் எதிர்த்துப் போரிடுகின்றான். உத்தரநாட்டு மகிபாலன் எதிர்த்துப் போரிடுகின்றான்.[8] ஆனால் சோழரின் செல்வாக்குத் தக்காணத்தில் பரவக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த மேலைச் சாளுக்கிய மன்னன் ஐந்தாம் விக்கிரமாதித்தனின் தம்பி இரண்டாம் ஜெயசிம்மன் மட்டும் எதிர்க்க வில்லை. முதலாம் இராசராசன் காலத்திலிருந்து சோழர்களோடு பெரும்பகைக் கொண்டிருந்த மேலைச் சாளுக்கியர் முக்கியமான வடநாட்டுப் போரின் போது இரண்டாம் ஜெயசிம்மன் மட்டும் எதிர்க்கவில்லை என்றால் அதில் ஏதோ ஒரு முக்கியக் காரணம் இருந்தாக வேண்டும். அக்காரணத்தை வரலாறு சொல்லவில்லை என்றாலும் வரலாற்று நாவலாசிரியராகிய சாண்டில்யன் தம்முடைய "மன்னர்கள்" என்ற நாவலில் சொல்லுகிறார்.

வடநாட்டு மன்னர்களெல்லாம் சோழப் படையை எதிர்க்கின்றபொழுது அடிவாசலில் இருந்த ஜெயசிம்மன் எப்படி எதிர்க்காமல் இருக்க முடியும் என்பதை நாவலாசிரியர் சிந்திக்கிறார். சோழர்களின் செல்வாக்கு வேங்கி நாட்டில் பரவக்கூடாது என்று விரும்பி அதன்பொருட்டு வேங்கியில் குழப்பங்களை உருவாக்கிக்கொண்டிருந்தான், ஜெயசிம்மன். மனோவேடத்தின் மூலம் இவ்வரலாற்றுச் சூழ்நிலையில் புகுந்த நாவலாசிரியர் வெளிச்சத்தைக் கொண்டு வருகிறார்.

## முடிவுரை

நாவலாசிரியர்கள் உண்மைகளைக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள். அவ்வாறு கண்டுபிடிக்கக் கூடிய உண்மைகள் தகுதியோடு இருந்தால் அவற்றை ஏற்பதற்கு வரலாற்றாசிரியர்கள் தயங்குவதில்லை. நாவலாசிரியர்கள் புதிய வெளிச்சத்தை நாவல்களின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றனர் என்பதன் மூலம் அறிய முடிகின்றது.

## பார்வை நூற்கள்

1. சிலம்பு, அடியார்க்கு நல்லார் உரை, சென்னை: உ.வே.சா நூல் நிலையம், 1978
2. மா. இராசமாணிக்கம், பல்லவர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1971.
3. வரலாற்று நாவல்களில் வரலாற்றுச் செய்திகள், தி. இராசகோபாலன், சென்னை 1993